## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.50/2024

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜுன் மாதம் 18 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பெரோஸ் கான் | மதம் | : முஸ்லீம் |
| த/பெ | : ஹாஜி அஹமத்கான் @ H.A. கான் @ கிரண் | ஜாதி | : -- |
| வயது | : 50 | கிராமம் | : -- |
| தொழில் | : வியாபாரம் | வட்டம் | : பெங்களூர் |

**18.06.2025**

**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தகப்பனாரின் கொடி வழி ஜாபிதா தாக்கல் செய்கிறேன். (**கொடி வழி ஜாபிதா வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) எனது அப்பாவின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். (**இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) எனது தாயாரின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். (**இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

2. குடும்ப உறுப்பினர் சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். (**குடும்ப உறுப்பினர் சான்று வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) எனது அண்ணி முத்தம்மாளின் இறப்பு சான்று தாக்கல் செய்கிறேன். (**இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) எனது சகோதரர் பத்தான் ஜபருல்லா கான் என்பவருக்கான அடக்கஸ்தள அறிக்கை தாக்கல் செய்கிறேன். (**அடக்கஸ்தள அறிக்கை வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) எனது சகோதரர் பத்தான் ஜபருல்லா கானின் இறப்பு சான்று தாக்கல் செய்கிறேன். (**இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ 7 ஆக குறியீடு

**செய்யப்படுகிறது)** திருத்தணி வட்டாட்சியரின் 14.02.2024 ம் தேதியிட்ட மேலெழுத்து தாக்கல் செய்கிறேன். **(மேலெழுத்து வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)